## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## சி.சி. 180/2022

2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கன்னிகா | வயது | 45 |
| த.பெ.(அ)க.பெ. | பொன்னுசாமி | தொழில் | விவசாயம் |
| ஊர் | கல்லாவூர் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை :

(1) நான் கல்லாவூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளுக்கும்எங்களுக்குமிடையே நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்துவருகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தேதி நினைவில்லை மாலை 6 மணிக்கு நான் என்னுடைய நிலத்தில் வழியில் உள்ள செடிகளை வெட்டிக்கொண்டிருந்தேன். அப்போது 1ம் எதிரி அந்த இடத்திற்கு வந்து தேவிடியா, உங்கொம்மால வோக்க என திட்டிக்கொண்டு நிலத்து பிரச்சனைக்காக கத்தியால் எனது தலையின் மீதும் இடது கையின் மீதும் வெட்டிவிட்டார். (சாட்சி தன்னுடைய இடது கையை காண்பிக்க அதில் வெட்டுப்பட்டதற்கான தழும்பு உள்ளது. மேலும் சாட்சி தன்னுடைய தலையை காண்பிக்க அவருக்கு முடி இருப்பதால் அது சரியாக புலப்படவில்லை) எனது மகள் பிரியதர்ஷினியை 1 மற்றும் 2 எதிரிகள் கையால் அடித்துவிட்டார்கள். நான் கவனமில்லாமல் விழுந்துவிட்டேன். எனது மகள் பிரியதர்ஷ்னி என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் இருந்த சமயம் என்னிடம் வந்து போலீஸார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் போட்டேன். புகார் வாக்குமுலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை வெட்ட பயன்படுத்திய கத்தியை காண்பித்தல் என்னால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் கத்தியால் தான் 1ம் எதிரி ராஜேந்திரன் என்னை வெட்டினார். மரக்கைப்பிடி போட்ட இரும்பு கத்தி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

எங்கள் வீட்டிற்கும், எதிரிகள் வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். எங்களுக்குள் நிலத்து பிரச்சனையால் தான் சம்பவம் நடந்தது. நான் மேற்படி சொல்லும் சொத்து எனக்கும், என் அண்ணன் பிள்ளைகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது தாத்தா சொத்து 4.20 செண்ட்டு என்றால் சரிதான். அதில் 2 ஏக்கர் 10 செண்ட்டு நிலத்தை 13.05.2016 அன்று ராஜேந்திரனுக்கு நான் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் எதிரடி கிரையம் செய்தோம் ஆனால் அவர்கள் அதை கிரையமாகவே செய்து கொண்டார்கள். அதற்கு ருபாய் இரண்டு லட்சம் வாங்கியிருந்தேன். அந்த இரண்டு லட்சம் வாங்கிகொண்டு தான் என்னிடத்தில் காண்பிக்கப்படும் கிரையபத்திரத்தை எழுதிக்கொடுத்தேன். மேற்படி கிரைய பணத்தை ருபாய் ஐந்து லட்சமாக திருப்பி கொடுத்துவிட்டேன். மேற்படி பணம் கொடுத்த பின்பு பத்திரத்தை ரத்து செய்யவில்லை. இந்த சொத்து சம்மந்தமாக தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி விஷயத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி செடிகளை வெட்டியதாக கத்தி சா.பொ 1 கத்தி என்றால் இல்லை அதில் வீட்டில் உள்ளது. அந்த கத்தி இதை விட நீளமாக உள்ளது. எதிரி ராஜேந்திரன் வந்தவுடன் கத்தியால் வெட்டிவிட்டார். அப்போது அவரும் அவருடைய பையனும் சேர்ந்து தடியால் என்னை அடித்தார்கள். அது அடுப்பு விறகு கட்டை. அதை நான் போலீஸாரிடம் கொடுக்கவில்லை. எதிரி பயன்படுத்திய சா.பொ.1 கத்தியை அன்றைய தினமே போலீஸாரிடம் கொடுத்துவிட்டேன். நாங்கள் மிளாகாய் பொடியை எதிரிகள் மீது அப்போது போட்டோம் என்றால் இல்லை. சா.பொ.1 கத்தி நான் பயன்படுத்திய கத்தி என்றாலும் நாங்கள் அவர்களை தாக்க முற்பட போது அவர் பிடிங்கியதால் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. நாங்கள் தான் அப்போது எதிரிகள் மீது மிளாகாய் பொடி தூவி எதிரியை கற்களால் தாக்கினோம் என்றால் சரியல்ல. நானும் எனது மகளும் சேர்ந்து எதிரிகளை கத்தியால் வெட்டினோம் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கும் புதுார் நாட்டிற்கும் 7 கி.மீ உள்ளது. அங்கு அரசு மருத்துவமனை உள்ளதா என்றால் உள்ளது. ஆம்புலன்ஸ் வந்ததா என்றால் வந்தது. அந்த ஆம்புலன்ஸில் எதிரிகள் ஏறியதால் நான் அதில் ஏறவில்லை. நான் ருபாய் 1500/- கொடுத்து தனியார் வண்டியில் வந்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆனேன். எதிரி புதுார்நாடு மருத்துவமனையில் அட்மிட் ஆனார். எதிரி திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆனார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகார் வாக்குமுலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்ல சொல்ல போலீஸார் எழுதிக்கொண்டார்கள். எதிரிகளுக்கு பாத்தியப்பட்ட

நிலத்தில் நான் உட்கார்ந்து கொண்டு அவர்களை அடித்துவிட்டு இவ்வழக்கை பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகள் இச்சொத்து சம்மந்தமாக சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சரிதான். நான் எதிரியிடம் பணத்தை வாங்கி கொண்டு அவருக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டு அந்த இடத்தில் நான் அத்துமீறி நுழைந்து அதை கேட்ட எதிரிகளை அடித்துவிட்டு அதை மறைப்பதற்காக நான் செடிகளை அறுத்துகொண்டிருந்த அறுவாளை போலீஸாரிடம் கொடுத்து பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனே் என்றால் சரியல்ல. நான் சொல்வது எதிரிகள் எங்களை அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை = இல்லை